# கைகளைக் கழுவுவோம்
# நோய்களைத் தவிர்ப்போம்



உணவு உண்ணுவதற்கு முன்,
பானம் பருகுவதற்கு முன்



செல்லப் பிராணிகளுடன்
விளையாடியதன் பின்



மலசலகூடம்
சென்ற பின்



தும்மல் மற்றும் மூக்கு
துடைத்ததன் பின்




முற்றத்தில்
விளையாடியதன் பின்



இரத்தம் பட்டதன் பின்,
கீழே வீழ்ந்ததன் பின்

**மேற் கூறிய சந்தர்ப்பங்களில் கைகளைக் கழுவுவதற்கு**
**உங்கள் பிள்ளையை வழிப்படுத்துங்கள்**




**முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபை - ஊவா மாகாண சபை**

# முதல் ஆசான்

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி மத்திய
நிலையங்களிலுள்ள பிள்ளைகளுக்கான செயற்பாடுகள்




இப்பத்திரிகையில் முன்வைக்கப்படும் செயற்பாடுகளானது
முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபையினால்
முன் பிள்ளைப்பருவத்தினரிடையே விருத்தி செய்ய எதிர்ப்பார்க்கும்
தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது

# மூன்றாம் பாகம்

ஊவா மாகாண
முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி
மத்திய நிலையங்களிலுள்ள
பிள்ளைகளுக்கான

## முதல் ஆசான்

ஆலோசனை மற்றும்
வழிகாட்டல்
கௌரவ ஊவா மாகாண ஆளுனர்
மற்றும்
ஊவா மாகாண பிரதம செயலாளர்
ஒருங்கிணைப்பு செயலாளர்

ஊவா மாகாணக் கல்வி அமைச்சு
நெறியாள்கை மற்றும்
தொழிநுட்ப உதவி பணிப்பாளர்

ஊவா மாகாண
முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி
அதிகார சபை
பதிப்பாசிரியர்கள்

பி.ஏ.டி.ஜே. ஜயவர்தன (ஓய்வு பெற்ற)
(முன்னால் ஆரம்பக் கல்வி
உதவிக் கல்விப் பணிப்பாளர்)

டப்லியு. எம். ஜயந்தா குணவர்தன
அதிபர்,
மாதிரி முன்பள்ளி முன் பிள்ளைப்பருவ
அபிவிருத்தி அதிகார சபை

பூ.ஸ்ரீதேவி (தமிழாக்கம்)
ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஆலோசகர்
கோட்டக் கல்விக் காரியாலயம் - பதுளை

பாடத்துறை உதவி
ஆர். எம். டி. கே. ரத்னாயக்க,
மாவட்ட முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி
உத்தியோகத்தர்,
மொனராகலை.

கே. எஸ். விக்கிரமாரச்சி,
அபிவிருத்தி உத்தியோகத்தர் (முன்பிள்ளைப்பருவ)
கந்தகெட்டிய.

ஆர். எம். எஸ். பாக்கியா,
ப/விசாக்கா மகளிர் உயர் கல்லூரி - பதுளை.

வை. டி. ஜயனி கே. மதுஷானி,
சமகி முன்பள்ளி - கந்தகெட்டிய.

வீ. மர்சி கிறிஸ்டினா,
புளூமிங் பட்ஸ் முன்பள்ளி - பசறை.

கணினி வடிவமைப்பு
மற்றும் அட்டை வடிவமைப்பு

Bee Studio
We Create your Dream
Photography
Web & Software Development
Creative Designing
071 33 9 44 71 | 0713 574 374

அச்சிடல்
ஊவா மாகாண சபை அச்சகம் - பதுளை.

## பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஊவா மாகாண ஆளுனரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபையினால் முன்பள்ளி பிள்ளைகளுக்கு விடுமுறை வழங்கப் பட்டுள்ளது. இதனால், இப் பிள்ளைகள் முறையானதோர் கற்றலின்றி பெற்றோருடன் வீட்டில் உள்ளனர். இக் காரணங்களின் அடிப்படையில் ஊவா மாகாண கௌரவ ஆளுனர் மற்றும் ஊவா மாகாண பிரதம செயலாளரின் அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டலின் கீழ் ஊவா மாகாணக் கல்விச் செயலணியின் ஆலோசனையின் பேரில் செயற்பாடுகள் அடங்கிய இப்பத்திரிகை தயாரிக்கப்பட்டுள்ளது.

2021ம் ஆண்டு முதலாம் தரத்திற்கு உள்வாங்கப்படும் பிள்ளைகளின் பிரவேச ஆற்றல்கள் தேசிய தரங்களுக்கேற்ப உரித்தாக்குவதுடன் முறையான பாடசாலையின் ஆரம்பக்கல்வியினை பலப்படுத்தல் ஊவா மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் ஊவா மாகாண முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகாரசபையின் முதன்மையானதொரு செயலாகும்.

## பெற்றோருக்கான அறிவுறுத்தல்கள்

- இப் பத்திரிகையின் ஊடாக வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு மேலதிகமாக மேலும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட உங்கள் பிள்ளையை வழிப்படுத்துங்கள்.
- இப்பத்திரிகையில் உள்ள செயற்பாடுகள் நிறைவு செய்ததன் பின்னர் மதிப்பிடுவதற்கு மீள இப் பத்திரிகையினை முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மத்திய நிலைய ஆசிரியரிடம் ஒப்படையுங்கள்.
- ஆசிரியருடன் மற்றும் பிள்ளையுடன் இப்பத்திரிகையினை பயன்படுத்துகையில் சுகாதார ரீதியான பாதுகாப்பு முறைகளை பின்பற்றுங்கள்.
- பிள்ளையுடன் மகிழ்வுடனும் விரும்பத்தக்க வகையிலும் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.
- பெற்றோர் இச்செயற்பாடுகளை பிள்ளையினைக் கொண்டு செய்விப்பதற்கு பிரிதொரு நேரத்தினையும் பொருத்தமான இடமொன்றினையும் ஒதுக்கிக் கொள்ளுங்கள்.
- பிள்ளைக்கு உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் உங்கள் உதவியைப் பெற்றுக் கொடுங்கள்.
- நீங்கள் உதவ வேண்டிய முறையினை காட்டுவதற்கு உரிய அறிவுறுத்தல்கள் ★ அடையாளம் இடப்பட்டு காட்டபபட்டுள்ளது.

வெளியிடல் மற்றும் வினியோகித்தல்

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி அதிகார சபை
ஊவா மாகாண சபை
தொலைபேசி இலக்கம் (94)55229518/0770150561
தொலை நகல் 0552229522
e-mail:- ecda.uva@gmail.com
Web:- uvaecda.up.gov.lk

முதல் ஆசான்

## பெற்றோரே இதைப் பற்றியும் சிந்திப்போம்...

அன்பார்ந்த தாயே, தந்தையே உங்கள் வாழ்வில் மிகப் பெறுமதியான சொத்து எது? வீடு, காணி, அல்லது வாகனம்... போன்ற பல சொத்துக்கள் ஞாபகத்திற்கு வரலாம். எனினும் உங்கள் வாழ்வில் மிக பெறுமதியான சொத்து உங்கள் பிள்ளை என்பதை உங்களுக்கு தெரியும். அதே வேளை பிள்ளைகள் மீது கொண்ட அன்பினால் உங்கள் பிள்ளைக்கு இவ்வாறு சொல்லலாம் அல்லவா?

ஓட வேண்டாம், மேலே ஏற வேண்டாம், கைகளினால் மணல் தொட வேண்டாம், கத்தியை எடுக்க வேண்டாம் ..என்றவாறு. இவ்வாறு நீங்கள் ஒரு நாளில் எத்தனை தடவைகள் கூறியிருப்பீர்கள் என்பதை நினைவு கூறுங்கள். “வேண்டாம்” எனும் சொல் பிள்ளையொன்றின் உடல் உள விருத்திக்கு பாரியளவு பாதிப்பினை ஏற்படுத்தும். பிள்ளையின் பாதுகாப்பினை கருத்திற் கொண்டு செய்யக்கூடியவற்றை செய்வதற்க்கு பணிப்பின் அது பிள்ளையின் உடல் உள விருத்திக்கு மிக நல்லதோர் உதவியே. என்னைப் போலவே இதனை வாசிக்கும் உங்களுக்கும் வீட்டைச் சுற்றி ஓடிப் பாய்ந்த, கட்டம் பாய்ந்த, விளையாட்டு வீடுகள் அமைத்து மணல் சோறு சமைத்த, மழையில் நனைந்த, குளங்குட்டை ஆறுகளில் பாய்ந்து குளித்த அழகு மிகுந்த இறந்தகாலமொன்று இருந்திருக்கலாம். அவ்வழகிய அனுபவங்களை எமது பிள்ளைகளுக்கு அனுபவிக்க நாம் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்துள்ளோமா? என சிறிது சிந்தித்துப் பார்ப்போம்.

விளையாட்டின் ஊடாகவும் சிறு சிறு வேலைகள் செய்வதன் ஊடாகவும் பிள்ளைகள் எவ்வளவு விடயங்கள் கற்றுக் கொள்கிறார்கள்? என்பதை நாம் அறிவோமா?

விளையாட்டின் ஊடாக பிள்ளைகள் எவ்வளவு விடயங்கள் கற்கிறார்கள்? நாம் எதிர்ப்பார்க்கும் சிறந்ததொரு பிள்ளையினை உறுவாக்குவதெனின் பிள்ளைகளுக்கு வேலை செய்வதற்கு, அனுபவங்களை பெறுவதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்க வேண்டும். அவ்வாறே பிள்ளைக்கு ஓடுதல், பாய்தல், போன்ற செயற்பாடுகளுக்கும் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக உடல் விருத்தி ஏற்படும். ஒற்றைக் காலால் பாய்தல், ஒளிந்து விளையாடல், மாங்கொட்டை பாய்தல், சோகி விளையாட்டு, தத்தக்காய் புத்தக்காய், தாயக்கட்டை விளையாட்டுக்கள்...

போன்ற பல்வேறு விளையாட்டுக்களின் ஊடாக உங்கள் பிள்ளையுடன் இவ்வாறு செலவிடும் காலமானது மகிழ்ச்சியை ஏற்படுத்துவதுடன் செயற்பாடுகளினூடாக அவர்களின் முழுமையான விருத்திக்கு துணை புரியும் அதே வேளை செயற்பாடுகளின் ஊடாக பலவித அனுபவங்கள் பெற்றுக் கொள்வர்.

சுதந்திர எண்ணங்களுடைய, அனைவருடனும் சிறந்த முறையில் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய ஆக்கப்பூர்வமான பிள்ளையொன்றினை உருவாக்குவது பெற்றோரின் கடமையாகும்.

ஏச். ஜி. பி. வாசனா பிரியதர்ஷனி,
அபிவிருத்தி உத்தியோகத்தர் (முன் பிள்ளைப்பருவ),
கோட்டக் கல்விக் காரியாலயம், வெல்லவாய.

### දෙමාපියන්ගේ අදහස්

.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................

මෙම පුවත්පත තවදුරටත්
සාර්ථක කර ගැනීම සඳහා පහත ලිපිනයට
ඔබගේ වටිනා අදහස් හා යෝජනා
යොමු කරන මෙන් කාරුණිකව ඉල්ලා සිටින්නෙමු.

ඌව පළාත් මුල් ළමාවිය සංවර්ධන අධිකාරිය,
පිං අරාව, බදුල්ල.

## எனது கையின் வடிவங்கள்.


- நீலத்தூள், அல்லது நீர்ச்சாயம் தேடிக்கெள்வோம்.
- அதனை தட்டொன்றில் கரைத்துக்கொள்வோம். (பிள்ளையின் உள்ளங்கையில் நிறம் ஒட்டுமாறு)
- கரைத்த சாயத்தின் மீது உள்ளங்கையை வைப்போம்.
- சாயம் பட்ட உள்ளங்கையை தரப்பட்டுள்ள வெற்றுக்கூட்டினுள் வைப்போம்.
- இவ்வாறு தாள் முழுவதும் உள்ளங்கையினை பல தடவைகள் வைப்போம். அழகு பார்ப்போம்.






## உயரமா? கட்டையா?


உயரம் குறைந்த உருவினை நிறந்தீட்டுவோம்.




உயரம் குறைந்த உருவினை நிறந்தீட்டுவோம்.



உயரம் கூடிய உருவினை நிறந்தீட்டுவோம்.




உயரம் கூடிய உருவினை நிறந்தீட்டுவோம்.



## காய்கறிகளையும் பழங்களையும் தெரிவோம்.

- காய்கறிகள் மற்றும் பழங்களை பொருத்தமானவாறு கூடைகளுக்கு கோடுகளினால் இணைப்போம்.
- நிறந்தீட்டுவோம்.







## குருவிகளுக்கு வீடொன்று கட்டுவோம்.

- நிறத்தாளொன்றின் மீது யோகட் கோப்பையினை வைத்து வட்டங்கள் மூன்று வெட்டிக்கொள்வோம் ( உரு 1 பாருங்கள் ).
- ஒவ்வொரு வட்டத்தையும் இரண்டாக மடிப்போம்.
- கீழிருந்து மேலாக வேறுபடாதவாறு வால் பகுதியை வெட்டிக்கொள்வோம் ( உரு 2 பாருங்கள் ).
- கண் மற்றும் சொண்டினை ஒட்டுவோம். ( உரு 3 பாருங்கள் ).
- அமைத்த குருவிகளை தரப்பட்டுள்ள மரத்தில் விரும்பிய இடத்தில் ஒட்டுவோம்.






## நாமும் வளர்கிறோம், மரங்களும் வளர்கிறது.

- தரப்பட்டுள்ள படங்களை நன்றாகப் பார்ப்போம்.
- அப்படங்கள் தொடர்பாகக் கதைப்போம்.
- படங்களுள் குழந்தைப்பருவ படத்தைக் காட்டுவோம்.
  - ✦ தனது பிள்ளையின் குழந்தைப்பருவ புகைப்படங்கள் இருப்பின் அவற்றைக் காட்டி அக்காலத்தில் செய்தவை தொடர்பாக கதையுங்கள்.
- தரப்பட்டுள்ள படங்களுள் பிள்ளை வளரும் சந்தர்ப்பங்களை தொடரொழுங்கில் காட்டுவோம்.
  - ✦ தனது பிள்ளையின் அக்காலங்கள் தொடர்பாகவும் கதையுங்கள்.
- குழந்தை பருவத்திலிருந்து வளரும் சந்தர்ப்பங்களை தொடரொழுங்கில் இணைப்போம்.



- போஞ்சி, கௌப்பி, பயற்றங்காய் போன்ற தானிய வகையொன்றை சூழலில் இடமுள்ள பொருத்தமானதோர் இடத்தில் அல்லது சாடியொன்றில் நடுவோம், நீர் ஊற்றுவோம்.
- கன்று வளர்வதைப் பார்ப்போம்.
- கன்றினை சித்திரமாக வரைவோம்.






## விவசாயம் மிக அருமை


- தரப்பட்டுள்ள படங்களை நன்றாகப் பார்ப்போம்.
  - ★ படத்தில் காட்டப்பட்டுள்ளவை தொடர்பாக பிள்ளையுடன் கதையுங்கள்.
  - ★ ஒவ்வொரு வேலையினை செய்வதற்கு தேவைப்படும் உபகரணத்தின் பெயரை சொல்லிக்கொடுங்கள்.
- ஒவ்வொரு வேலைக்குப்பொருத்தமான உபகரணத்தை தெரிந்து


















## நாம் சமயலறை உபகரணங்கள் செய்வோம்.

★ களிமண் தேடிக்கொடுங்கள்.
★ சமயலறையிலுள்ள உபகரணங்களை களிமண்ணினால் செய்ய பிள்ளைக்கு உதவுங்கள். (உதாரணம்- உரல், உலக்கை, சட்டி, முட்டி போன்றவை)

- செய்த உபகரணங்களின் பெயர்களைக் கூறுவோம்.
- கீழே தரப்பட்டுள்ள உருக்களை நிறந்தீட்டுவோம்.



ක්‍රියාකාරකම - 05

## சுவையுள்ள சத்துள்ள பழச்சாறு


- முன் அட்டையிலுள்ள படத்தை நன்றாகப் பார்ப்போம்.
- படத்தில் உள்ளவற்றை விபரிப்போம்.
- எண்ணுவோம். அன்னாசிப்பழங்கள் எத்தனை?, மாம்பழங்கள் எத்தனை?, தர்ப்பூசணிப்பழங்கள் எத்தனை?,
- பழங்களின் படங்களை ஒட்டி புத்தகமொன்றை செய்வோம்.





## யார் இவர்?

- உருவினைப் பார்ப்போம்.
- முகத்தில் இரு கண்கள், மூக்கு மற்றும் வாயினை வரைவோம்.
- கைகளையும் கால்களையும் வரைவோம்.
- உருவினை நிறந்தீட்டுவோம்.




# நாம் பிராணிகளின் மீது அன்பு செலுத்துவோம்

அழகு நிறைந்த சிறியதொரு கிராமத்தில் சுருதி, கவின் என்று இரு பிள்ளைகள் இருந்தார்கள். சுருதிக்கு அழகான வீட்டுத் தோட்டமொன்று இருந்தது. அங்கு வண்ண வண்ண அழகான பூக்கள், பழங்கள், காய்கறிகள் என்பன நிறைய இருந்தன. பூக்களில் தேன் குடிக்க, பழங்களை உண்ண வண்ணத்துப்பூச்சிகளும் பறவைகளும் இத்தோட்டத்திற்கு வந்தன. ஓய்வு நேரங்களில் சுருதியும் கவினும் சுருதியின் வீட்டுத் தோட்டத்தில் அமைத்துள்ள விளையாட்டு வீட்டில் விளையாடுவார்கள். நீண்ட நாட்கள் எங்கும் செல்ல முடியாது போனதால் சுருதியும் அவளின் அம்மாவும் அப்பாவும் சுருதியின் மாமா வீட்டிற்கு சென்றார்கள். அங்கு சில நாட்கள் இருந்து மீண்டும் வீடு திரும்பினர். சுருதி வீட்டிற்கு வந்த உடனேயே தோட்டத்தில் உலாவச் சென்றாள். சுருதியின் தோட்டம் பாழாகி இருந்தது.. சுருதி மிகவும் கவலைப்பட்டாள். கவலையுடன் தோட்டத்தில் இருந்த சமயம் சுருதியின் நண்பன் கவின் அங்கு வந்தான். சுருதி, நீ ஏன் கவலையுடன் இருக்கிறாய்? கவின் கேட்டான். கவின், பாருங்களே அழகாய் இருந்த எனது தோட்டம் இப்போது பாழாகி விட்டது. வண்ணத்துப்பூச்சிகள் வருவதுமில்லை பறவைகள் வருவதுமில்லை. சுருதி அவளின் கதையை கவலையுடன் கவினிடம் கூறினாள். கவினும் கவலைப்பட்டான். கவின் யோசித்தான். சுருதியிடம் இவ்வாறு கூறினான். நாம் இருவரும் சேர்ந்து தோட்டத்திலுள்ள பூஞ்செடிகள் மரஞ்செடி கொடிகளுக்கு தினமும் நீர் ஊற்றுவோம்.

இரு நண்பர்களும் கன்றுகளுக்கு தினமும் நீர் ஊற்றத்தொடங்கினர். இதோ சில காலம் சென்றதும் மரஞ்செடிகொடிகள், பூக்கள் சிரிக்கத்தொடங்கின. பூக்கள் பூத்து காய்கள் காய்த்து எங்கும் வாசம் வீசியது. வாசத்தினூடே வண்ணத்துப்பூச்சிகள், பறவைகள் ஒவ்வொன்றாக வரத்தொடங்கின. இதைக்கண்டு இருவரும் மகிழ்ந்தார்கள். சுருதிக்கு இன்னொரு யோசனை வந்தது. கவின், தோட்டத்திற்கு வரும் பிராணிகளுக்கு உணவு வைக்க உணவுத்தட்டொன்றை அமைப்போமா? அப்போது நிறைய வண்ணத்துப்பூச்சிகளும் பறவைகளும் வருமல்லவா? சுருதி சொன்னாள். இருவரும் சேர்ந்து உணவுத்தட்டொன்றை செய்து தோட்டத்தின் ஓரத்திலுள்ள பலா மரத்தில் அதை பொருத்தினார்கள். பொறு, நான் வீட்டினுள் சென்று சிறிது உணவு எடுத்து வருகிறேன். சுருதி வீட்டினுள் ஓடிச்சென்று உணது கொண்டு வந்தாள். கவின் தட்டில் உணவை வைத்தான். சுருதியும் கவினும் மரமொன்றின் பின்னால் மறைந்திருந்து சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தனர். உணவைக்கண்டு அணில் குஞ்சுகளும் பறவைகளும் உணவுத்தட்டருகே வந்தன. அவை உணவு உண்பதைக்கண்டு இருவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

எனவே சிறுவர்களாகிய நாமும் சுருதியையும் கவினையும் போல பிராணிகளையும் சூழலையும் நேசிப்போம்.



- ☆ உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து பிராணிகளுக்கு உணவுத்தட்டொன்றை அமைத்து பொருத்தமான இடத்தில் வையுங்கள்.
- ☆ தினமும் பிராணிகளுக்கு உணவு வைக்க பிள்ளைக்கு உதவுங்கள்.





# எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி



- ☆ இரவில் ஓய்வு நேரமொன்றை பயன்படுத்துங்கள்
- ☆ பொருத்தமான இடமொன்றில் பாயொன்றில் வீட்டில் அனைவரும் அமருங்கள்.
- ☆ பிள்ளையின் கையில் ஒலிவாங்கியொன்று அல்லது அதற்கு ஒத்த பொருளொன்றை கொடுங்கள்.
- ☆ அனைவருக்கும் முன்னே பிள்ளை விரும்பிய நடனமொன்று, கதையொன்று, பாடலொன்று முன்வைக்குமாறு கூறுங்கள்.
- ☆ அனைவரும் சேர்ந்து கைகளைத்தட்டி பிள்ளையை ஊக்கப்படுத்துங்கள்.

## செயற்பாடு - 4

# ஓடுவோம் பாய்வோம் வட்டங்கள் வரைவோம்.

- ☆ பிள்ளையுடன் முற்றத்திற்குச் செல்லுங்கள்.
- ☆ ஒரு வட்டத்திலிருந்து இன்னொரு வட்டத்திற்கு இலகுவாக பிள்ளை பாயக் கூடியவாறு 6 வட்டங்கள் வரையுங்கள். (உருவில் காட்டப்பட்டுள்ளவாறு)

- 6 வட்டங்களுள் ஒரு வட்டத்தின் நடுவில் நிற்போம்.
- அவ்வட்டத்தைச் சுற்றி இன்னொரு வட்டம் வரைவோம்.
- அடுத்த வட்டத்திற்குள் பாய்ந்து அவ்வட்டத்தைச் சுற்றியும் வட்டமொன்று வரைவோம்.
- இவ்வாறு 6 வட்டங்களுக்கும் பாய்ந்து வட்டத்தைச்சுற்றி
- வட்டம் வரைவோம்.




- ☆ செயற்பாட்டில் ஈடுபடும் போது பிள்ளையுடன் சேர்ந்து கீழே தரப்பட்டுள்ள பாடலை பாடுங்கள்.


வட்டங்கள் வரைவோமே
வட்டத்தினுள் பாய்வோமே
வட்டத்தைச் சுற்றி வட்டம் வரைந்து
வட்டத்தைச் சுற்றி ஓடுவோமே

## இரு உருக்களும் ஒரே மாதிரியா?

- இரண்டு படங்களையும் நன்றாகப் பார்ப்போம்.
- 1 படத்திற்கு ஏற்ப 2 படத்தில் உள்ள குறைபாடுகளைத் தேடுவோம்.
- 1 படத்தைப் பார்த்து  2 படத்திலுள்ள குறைவான பகுதிகளை வரைவோம்.
- இரண்டு படங்களையும் நிறந்தீட்டுவோம், அழகைப் பார்ப்போம்.



1 படம்




2 படம்






## சிறுவர் நாம் பிராணிகள் ஆவோம்

- பிராணிகளை நிறந்தீட்டுவோம்.
- இப்பிராணிகளின் பெயர்களைக் கூறுவோம்.
- இப்பிராணிகள் செல்வதைப் பொல் நடித்துக் காட்டுவோம்.
- பிராணிகளின் படங்களை ஒட்டி புத்தகமொன்றை செய்வோம்.



## டிரிங் டிரிங் டிரிங்

- தரப்பட்டுள்ள படங்களைப் பார்ப்போம்.
- படங்களின் பெயர்களைக் கூறுவோம்.
- ★ தெரியாத படங்களை சொல்லிக் கொடுங்கள்.












★ முத்திரையொன்றை தேடிக்கொடுத்து இக்கடித உறையில் சிறு கட்டத்தினுள் ஒட்டுவதற்கு கொடுங்கள்.




★ இப்பாடலை பிள்ளையுடன் பாடுங்கள்.

டிரிங் டிரிங் டிரிங் என்று - தபால் மாமா வந்தாரு
வேகமாக ஓடுவோம் - கடிதமதை வாங்குவோம்.






## நீங்கள் எங்கே?


- படத்தினை நன்றாகப் பார்ப்போம். விடை கூறுவோம்.
- பூச்சாடி இருப்பது எங்கே?
- மேசைக்கு கீழ் இருப்பது என்ன?
- மேசைக்கு அருகில் இருப்பது எது?
- மேசையிலிருந்து தூரத்தில் இருப்பது எது?



முதல் ஆசான்

## நாம் பயணம் செல்வோம்.





- தரப்பட்டுள்ள படங்களைப் பார்ப்போம்.
- படங்களின் பெயர்களைக் கூறுவோம்.
- முறிகோடுகளை இணைத்து பேருந்தினை வரைவோம்.
- படங்களுக்கு நிறந்தீட்டுவோம்.

★ பிள்ளையுடன் பாடலைப் பாடுங்கள்

சிக்கு புக்கு சிக்கு புக்கு ரயில் வண்டி - நீண்டு செல்லும் ரயில் வண்டி
நீண்ட தூரம் சென்றிடலாம் - சேர்ந்து நாமும் மகிழ்ந்திடலாம்

